# தெய்வீக அநுபவத்தின் வெளிப்படுத்தல்

## சாது C. செல்வ ராஜ் (அப்பா) MSc. அவர்களின் சாட்சி

எழுதியவர்

**சாது C. செல்வ ராஜ் (அப்பா) MSc.**

மலவிளை

JESUS IS TRUE CHRIST THE GOD

PUBLICATIONS

MALAVILAI



இந்த புத்தகம் ONE GOD!! ONE PEOPLE!!
A Document Revealing GOD's Secrets என்னும் ஆங்கில புத்தகத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு தொகுப்பாகும்.

# தெய்வீக அநுபவத்தின் வெளிப்படுதல்:

**சாது. C. செல்வ ராஜ் (அப்பா) அவர்களின் சாட்சி**

**Copyright ©**

**ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை**
தலைமை இடம் : மலவிளை

**ADHI PENTHEC0STHE SATHYA SABHAI**
**Headquarters : Malavilai**

**BEGINNING PENTECOSTAL TRUTH CHURCH**
**Headquarters : Malavilai**

**Author** : **SADHU. C. SELVA RAJ** (Appa) **MSc.**

**Contact Address :**

**Sadhu. C. Thomas M. Kurian** (Appa)
Trustee and Administrator
Beginning Pentecostal Truth Church
Malavilai Jeba Veedu
Adhi Penthecosthe Sathya Sabhai Malavilai Salai
Cheruppalur P.O., PIN 629 161
Kanniyakumari District, Tamil Nadu, India.

**Name and Address of the Publisher :**

**ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை**
தலைமை இடம் : மலவிளை

**ADHI PENTHEC0STHE SATHYA SABHAI**
**Headquarters : Malavilai**

**BEGINNING PENTECOSTAL TRUTH CHURCH**
**Headquarters : Malavilai**

**Edition 2018**
**BPTCBN 0-00- 03**

**All Scripture quotations are from
the Authorized TAMIL OV-BSI.**

Websites: www.onegodonepeople-sadhuselvaraj.org
www.bptchurch.org

e-mail : spiritual@bptchurch.org

# கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

*சாது. **G.** தேவநேசன் (ஐயா) அவர்களால் சபையை நடத்தும் படியாக ஏற்படுத்தப்பட்டு, அதிகாரப்படுத்தப் பட்டதான, கிறிஸ்துவின் சாட்சியாகிய சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களின் அநுபவ சாட்சி*

## 1 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள்

தேவனாகிய கர்த்தருடைய மகா பெரிதான கிருபையினால் 'ஒன்றே குலம்! ஒருவரே தேவன்!' – "தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்தும் பத்திரம்" என்னும் பெயர் கொண்ட விலை மதிப்பற்ற புஸ்தகத்தை எழுதிய சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள், இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள, பள்ளியாடியில் பிறந்தார். அவர்களது பெற்றோர் பள்ளி ஆசிரியர்கள் ஆவர். அவர்களது சொந்த ஊரான குமரன்குடியில் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களை, அவர்களது பெற்றோர் மிகவும் அன்போடு வளர்த்தினார்கள். அவர்கள், அவர்களது பெற்றோருக்கு மூத்த மகனும், அவர்களது சகோதரிகளுக்கு ஒரே சகோதரனுமாகக் காணப்பட்டார்கள். சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் சி.எஸ்.ஐ. கிறிஸ்தவராகக் காணப்பட்டு சாதாரணமான ஒரு கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். எதார்த்தமான கிறிஸ்தவ ஜீவியமோ, ஆவிக்குரிய அனுபவங்களோ எதுவும் இல்லாத அனுபவத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தமிழில் 'செல்வராஜ்' என்றால் 'பரலோகின் அரசாட்சி' என்று பொருள்படும். (*மத்தேயு 4 : 17*)

## 1.1 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுக்கு மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தாயார் அளித்ததான உறுதியான விசுவாசம் (நம்பிக்கை)

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் சிறுவனாக இருந்தபோதே அவர்களது தாயார் C. முத்தம்மாள் அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே ஒன்றான மெய்த்தேவன் என்றதான அறிவைப் புகட்டினார்கள். தாயார் ஒன்றான மெய்த் தேவனைப் பற்றி புகட்டிய அறிவினால், எல்லா நாமங்களுக்கும் மேலான மெய் நாமத்தை உடையவராகிய ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரே மகா பெரியவரும், மகா பரிசுத்தமும், மகா வல்லமையுடையவரென்றும், அவரை மாத்திரமே தொழுது கொள்ள வேண்டும் என்றதான உறுதியான விசுவாசத்தை (நம்பிக்கை) சிறு வயது முதலே உடையவர்களாய்க் காணப்பட்டார்கள். *பிலிப்பியர் 2 : 9 - 11*

எனவே சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் மற்ற எல்லாப் பொய் தெய்வங்களையும் முழுமையாக ஒதுக்கினவர்களாகவும், அவைகளை ஒருபோதும் சேவியாதவர்களுமாகச் சிறுவயது முதலே காணப்பட்டார்கள். தேவனுக்கே மகிமை! பிதாவாகிய தேவனுக்கே ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சாதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

## 1.2 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுக்கு, குடும்பத்திலுள்ள சகோதரன், கர்த்தருடைய சபையைக் குறித்தும், சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்தும் அளித்ததான உறுதியான விசுவாசம் (நம்பிக்கை)

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் உயர்நிலைக் கல்வி பயின்று கொண்டு இருந்த போது அவர்களது குடும்பத்தில் உள்ள சகோதரனும், சக

மாணவனுமாகிய C. எஸ்றா என்பவர், இந்நாளில் கர்த்தருடைய மகிமையான சபையில் ஊழியக்காரராகக் காணப்படுகிறவர், கர்த்தருடைய சபையைக் குறித்தும், சபையில் நடக்கும் ஆராதனைகளைக் குறித்தும், சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்தும், ஐயா அவர்களின் உபவாசங்களைக் குறித்தும், அவர்களது பிரசங்கங்களைக் குறித்தும், சபையின் முக்கியமான காரியங்களைக் குறித்தும், இந்தச் சபையின் மூலமாகவும், சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் மூலமாகவும் உலகம் முழுவதும் நடக்கப் போகிறதான அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள், பலத்த செயல்கள் குறித்தும் வழக்கமாகச் சொல்லி வந்தார்கள்.

சபையைக் குறித்த, சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்த, அவர்களுடைய வழக்கமான பேச்சினால் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் சபையின் விசேஷம், முக்கியத்துவம், சிறப்புகள், கண்ணியம் ஆகியவற்றைக் குறித்தும், சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களின் மதிப்பு, உத்தமம், சிறப்புகள், உயர்ந்த ஸ்தானம், கண்ணியம் குறித்தும் மிக நன்றாக அறிந்து கொண்டார்கள். அதன் காரணமாக சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுடைய இருதயம் தேவனுடைய மகிமையான சபையினிடமும், தேவனுடைய மகிமையான ஊழியக்காரராகிய சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களிடமும் முழுமையாகக் கவரப்பட்டது. இது தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவ மகிமைக்காகச் செய்யப்பட்ட மகிமையான கிரியைகளுள் ஒன்றாகும்! தேவனுக்கே மகிமை!

## 1. 3 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களை தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தொட்டு சந்தித்தது

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் சென்னை தாம்பரத்திலுள்ள மெட்ராஸ் (சென்னை) கிறிஸ்தவக் கல்லூரியில் 1972 ம் ஆண்டு எம்.எஸ்.சி.

இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த போது மன சமாதானம் இழந்து அதினிமித்தம் மிக பயங்கரமான, தாங்கக் கூடாத கஷ்டத்தோடு காணப்பட்டார்கள். அப்படி காணப்பட்ட போது அவர்கள் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் தொட்டு, சந்திக்கப்பட்டார்கள். தேவன் தம்முடைய மகா பெரிய இரட்சிப்பாகிய பாவங்களிலிருந்து விடுதலையையும், பாவ மன்னிப்பையும் இலவசமாகக் கொடுக்கும்படியாக எதிர்பாராதவிதமாக அவர்களைத் தொட்டு சந்தித்தார்! எவ்வளவு அன்பு மிகுந்தவர் நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து!

தேவனும், கர்த்தருமாகிய, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அப்பா அவர்களுக்கு அவர்களுடைய பாவங்களைக் குறித்த மனஸ்தாபத்தோடு, தேவனிடத்தில் அறிக்கையிட்டுப் பாவங்களிலிருந்து விடுதலையாகிய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள பயங்கரமான உணர்வை அன்பாகக் கொடுத்தார். அந்த நேரத்தில் அப்பா அவர்கள் மனந்திரும்பி, கண்ணீரோடும் அழுகையோடும் அவர்களுடைய பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டு சில நாட்கள் ஜெபம் பண்ணினார்கள். அவர்களுடைய கல்லூரி சக மாணவர்களில் ஒருவரும், அப்பா அவர்களைப் பாவங்களிலிருந்து பூரணமான விடுதலை பெற பாவங்களை அறிக்கையிட்டு ஜெபம்பண்ணும்படி உற்சாகப்படுத்தினார். ஆனால் அப்பா அவர்களுடைய ஆர்வமின்மையினாலும் அதற்கு முக்கியத்துவம் கொடாததினாலும் பாவங்களிலிருந்து பாவமன்னிப்பையும், இரட்சிப்பையும் அடைந்து கொள்ளாமலிருந்தார்கள். இதினிமித்தம் அப்பா அவர்கள் எவ்வளவாய் அவர்களுடைய கர்த்தரும் தேவனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மறந்து, அவருடைய அன்பை மறந்து, அறிவின்மையோடு காணப்பட்டதைக் குறித்து மிகவும் அதிகமாய் வேதனைப்பட்டதாக அவர்களது சாட்சியில் எழுதியிருக்கிறார்கள்.

## 1.4 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் மலவிளையிலுள்ள தேவனுடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபைக்குச் சென்று இரட்சிக்கப்பட்டது

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்த பின்பு மலவிளையிலுள்ள கர்த்தருடைய சபைக்கு சென்று சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்பது வழக்கமாக இருந்தபடியால் மீண்டும் கர்த்தரால் தொட்டு சந்திக்கப்பட்டார்கள். ஐயா அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்டு, அப்பா அவர்கள் தான் செய்த பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அழுது பாவ மன்னிப்புக்காகவும் அவைகளிலிருந்து விடுதலையாகிய இரட்சிப்புக்காகவும் ஜெபம் பண்ணினார்கள். பல நாட்களாக இரவு பகலாக கண்ணீரோடும், அழுகையோடும், தாழ்மையோடும், தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு ஜெபம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுக்கு இரக்கமாய், பாவமன்னிப்பு, பாவங்களிலிருந்து இரட்சிப்பு, பாவங்களிலிருந்து விடுதலை, பரிசுத்தமாகுதல், பரிசுத்த ஜீவிய அனுபவங்களை அளித்து ஆசீர்வதித்தார். அப்பா அவர்கள் எல்லா கவலைகள், பிரச்சனைகள், பாரங்கள், துக்கங்கள், வேதனைகளிலிருந்து சரீரப் பிரகாரமாக மற்றும் மனரீதியாக, முழுமையாக விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் வழக்கமாக மலவிளை ஜெபவீட்டிற்கு வந்தபோது தேவன், அப்பா அவர்களுக்கு இருந்த குட்டி நாக்கு வளர்ந்ததான பிரச்சனையிலிருந்தும் கூட அதிசயமான பிரகாரமாகக் குணமாக்கப்பட்டு, தெய்வீக சமாதானம், சந்தோஷம் மற்றும் ஆறுதலினால் முழுமையாக நிறைக்கப்பட்டார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவினால் முழுமையாக மாற்றப்பட்டு, இரட்சிக்கப்பட்டு விடுதலையாக்கப் பட்டார்கள். தேவனுக்கே மகிமை! பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள

வாஞ்சையற்றும், முக்கியத்துவம் கொடுக்காமலிருந்ததினிமித்தமும் அப்பா அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாமல் இருந்ததற்காக வருத்தப்பட்டு தன்னுடைய சாட்சியில் எழுதியிருக்கிறார்கள்.

## 1.5 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தேடி அவரால் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னார் "*முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம்* (உலக ஆசீர்வாதங்கள்) *உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.*" (*மத்தேயு 6 : 33*) அதன்படி அப்பா அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினார்கள். தேவன், அப்பா அவர்களை உலகப் பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் ஆசீர்வதித்தார். கர்த்தர் அவர்களுக்கு பாவமன்னிப்பையும், பாவத்திலிருந்து விடுதலையாகிய இரட்சிப்பையும் அளித்தார். அப்பா அவர்கள் எம்.எஸ்.சி. பட்டம் வாங்க கர்த்தர் இரக்கம் செய்தார். எந்தவித மருத்துவ சிகிட்சையோ, அறுவை சிகிட்சையோ இல்லாமல் அதிசயமாக அப்பா அவர்களுக்கு குட்டி நாக்கு வளர்ந்த பிரச்சனையையும் குணமாக்கினார். அதற்கு முன்பு அப்பா அவர்கள் இரண்டு எம்.பி.பி.எஸ். மருத்துவர்களிடம் குட்டி நாக்கு வளர்ந்த பிரச்சனைக்காக மருத்துவ சிகிட்சை பெற்றார்கள். அந்த இரண்டு மருத்துவர்களில் ஒரு மருத்துவர் அப்பா அவர்களுக்குச் சில மருந்துகளைக் கொடுத்து அறுவை சிகிட்சை செய்து கொள்ளும்படி அறிவுறுத்தினார். மற்றொரு மருத்துவர் அப்பா அவர்களுக்குப் பலவிதமான மாத்திரைகளைக் கொடுத்தார். அந்த மாத்திரைகளை உட்கொண்டதின் விளைவாக, அவர்களுடைய சரீர ஆரோக்கியம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. ஆகையால் மாத்திரைகளை

உட்கொள்வதை அப்பா அவர்கள் நிறுத்தி விட்டார்கள். கர்த்தர் அப்பா அவர்களுக்கு ஆவி, ஆத்தும, சரீர மன சுகத்தை அளித்து ஆசீர்வதித்தார். அல்லாமலும் மிகுந்த சமாதானம், மிகுந்த ஆறுதல் மற்றும் நல்ல ஆரோக்கியமுடைய வாழ்வை அளித்து அப்பா அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

அப்பா அவர்கள் ஒரு அரசு ஊழியராகப் பணியாற்ற வேண்டுமென்று விரும்பினார்கள். அப்பா அவர்களின் விருப்பத்தை அறிந்த கர்த்தர் அப்பா அவர்கள் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்னதாகவே அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாகத் தமிழ்நாடு வருவாய்த்துறையில் தம்முடைய சித்தத்தின்படி அப்பா அவர்களுக்கு அரசு உத்தியோகம் கிடைத்தது. அப்பா அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மற்றும் வேறுசில அலுவலகங்களிலும் பணியாற்றினார்கள். மிகுந்த உண்மையுடனும், நேர்மையுடனும், ஒளிவு மறைவற்ற தன்மையுடனும் 01.09.1973 முதல் 01.11.1976 வரையிலும் வருவாய்த்துறையில் பணியாற்றினார்கள். இதற்கு அவர்களுடைய சக ஊழியர்களே சாட்சிகள். தேவனுக்கே மகிமை!

## 1. 6 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் ஞானஸ்நானத்தின் மூலம் ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் விசுவாசியானது

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் அரசு பணியாளராக இருக்கும் போது (*மத்தேயு 3 : 6, 13 – 17; யோவான் 3 : 23*) ஆகிய வசனங்களின்படி நம்முடைய கர்த்தருடைய சபையின் மேய்ப்பர் ஒருவரால் (*எபேசியர் 4 : 11*) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் (*மத்தேயு 28 : 19*) 21.10.1973 அன்று பரளியாற்றில் முழுமையாக மூழ்கி ஞானஸ்நானம் பெற்று, மலவிளையைத் தலைமையிடமாகக்

கொண்டுள்ள கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் விசுவாசியானார்கள்.

## 1.7 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுக்குத் தேவனுடைய தெய்வீக அழைப்பு வெளிப்பட்டது

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர் அல்லது தேவனுடைய வேலையாளாகப் பணிபுரியவும், தேவனுடைய ஊழியத்தில் பிரவேசிக்கவும் ஆரம்பத்தில் விரும்பவில்லை. ஆனால் அரசு பணியைச் செய்து கொண்டு ஒரு விசுவாசியாக வாழ வேண்டும் என்று விரும்பினார்கள். இப்படியாக அரசு பணியைச் செய்து கொண்டிருக்கும் போது சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் அப்பா அவர்களிடம் தேவனுக்கு ஊழியம் செய்யும்படியான தேவ அழைப்பு அவர்களுக்கு இருப்பதைக் குறித்துச் சொன்னார்கள். அதன்பின்பு தான் அப்பா அவர்களும் தேவனுக்கு ஊழியம் செய்வது தேவனுடைய நித்தியமான, மகா மகிமையான சித்தத்தின்படியானது என்று தேவனுடைய இரக்கத்தினால் புரிந்து கொண்டார்கள். ஆனால் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய வேண்டுமானால் ஒருவன் எல்லாவற்றையும் விட்டு, வெறுக்க வேண்டும். மேலும் அவன் ஒரு துறவி அல்லது சந்நியாசி அல்லது முனிவர் போல வாழ வேண்டும். தேவனுக்கே மகிமை!

## 1.8 கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்படி சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் அரசு பணியை இராஜினாமா செய்தது

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் இந்தக் காரியங்களைக் குறித்தெல்லாம் பூரணமான அறிவுடையவர்களாகக் காணப்பட்டதால் பதவி உயர்விற்குத் தேவையான ஏழு தேர்வுகளில் வெற்றி பெற்றிருந்தும் 01.11.1976

அன்று அவர்களுடைய அரசு பணியை இராஜினாமா செய்தார்கள். இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும் பணி உலகிலுள்ள மற்ற எல்லா பணிகளையும் விட உயர்வானது என்று அப்பா அவர்கள் நம்பினார்கள். தேவ ஊழியம் என்பது மனிதனுக்குப் பரலோகத்தின் தேவனால் கொடுக்கப்பட்டப் பரலோக அரசு பணியாகும். எந்த மனிதனும் தானாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய பணி தேவனுடைய பணி அல்ல. இது மிகவும் மகிமையும் ஆசீர்வாதமுமான பணியாகும். தேவ சித்தத்தின்படி ஊழியம் செய்யாத எவனும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முடியாது. "*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*" (*மத்தேயு 7 : 21*)

அன்பான கர்த்தர் தொடர்ந்து மீண்டும், மீண்டும் அப்பா அவர்களுக்கு அரசு பணியை இராஜினாமா செய்துவிட்டு அவருடைய ஊழியத்தில் சேரும்படி நல்ல விழிப்புணர்வைக் கட்டளையிட்டார். இந்த உண்மையைப் புரிந்து கொண்டு அதை விசுவாசித்து பரலோக வாழ்வைச் சொந்தமாக்கும்படி அவர்களுடைய உலக அரசாங்கப் பணியை இராஜினாமா செய்தார்கள். பரலோக ராஜ்யம் என்பது ஒரு மனிதனுக்கு விலையேறப் பெற்ற பொருள்; விறையேறப் பெற்ற முத்து; மிகுந்த ஆஸ்தி; மிகுந்த பொக்கிஷம் என்று புரிந்து கொண்டார்கள். அப்பா அவர்கள் பரலோக ராஜ்யத்தின் மகா பெரிதான மகிமைகளையும், ஆசீர்வாதங்களையும் குறித்ததான பூரணமான அறிவுடையவர்களாக இருந்தார்கள். அதினால் அப்பா அவர்களுக்கு உலக அரசுப்பணி ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. பரலோக ராஜ்யமே அவர்களுக்குப் பெரிதாகவும் விலையேறப் பெற்றதாகவும் தோன்றியதால் அரசு பணியை இராஜினாமா செய்தார்கள். பின்பு சாது. G. தேவநேசன் (ஐயா)

அவர்கள் அப்பா அவர்களிடம், தேவ ஊழியத்தைச் செய்வதற்கு அப்பா அவர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும் என்று கூறினார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

'கர்த்தருடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும்' என்பது தேவனுடைய ஊழியத்தைச் செய்ய எவருக்கும் கண்டிப்பாகத் தேவைப்படும் அறிவுரையாகும். கர்த்தருடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படாமல் அல்லது கர்த்தருடைய தெய்வீக வல்லமை, தெய்வீக பெலன் மற்றும் தெய்வீகக் கிருபையைப் பெறாமல் எவரும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய முடியாது. தேவனுக்கே மகிமை!

## 1.9 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, அவருடைய ஊழியத்தில் பிரவேசித்தது

பின்பு சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள், கர்த்தருடைய பரிசுத்த ஆவியைப் பெறுவதற்காகவும், கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கேற்ற அநுபவங்களை அடைந்து கொள்வதற்காகவும் கர்த்தரிடத்தில் காத்திருந்து ஜெபம்பண்ணத் தொடங்கினார்கள். மேலும் கர்த்தருடைய இரக்கத்திற்காகவும் ஜெபம் பண்ணினார்கள். கர்த்தருடைய தெய்வீக வல்லமை, தெய்வீக பெலன் மற்றும் தெய்வீக இரக்கத்தைப் பெறாமல் ஒருவரும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியாது. அப்பா அவர்கள் தங்களை முழுவதுமாக கர்த்தருடைய மகா பரிசுத்த பாதங்களில் ஒப்படைத்தார்கள். தங்களை முழுவதுமாகக் கர்த்தருக்கு அர்ப்பணித்துக் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினார்கள். கர்த்தரிடம் வருந்திக் கெஞ்சினார்கள். கர்த்தரை நோக்கி வேண்டிக் கொண்டார்கள். கர்த்தரிடம்

தாழ்மையோடு கேட்டுக் கொண்டார்கள். கர்த்தரிடம் விண்ணப்பங்களை ஏறெடுத்தார்கள். மகா கவலை, துக்கம் நிறைந்த, பாரமான இருதயத்தோடு கர்த்தரிடம் மன்றாடினார்கள். கர்த்தருடைய இரக்கத்தையும், பரிசுத்த ஆவியையும் பெற்றுக் கொள்ளும்படி கண்ணீரோடும், தாழ்மையோடும் அழுது கண்ணீர் விட்டார்கள். அன்பான தேவன் அப்பா அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவர்களுக்கு இரக்கத்தைக் கட்டளையிட்டார். அந்நிய பாஷைகள் அடையாளத்தோடு கர்த்தர் அப்பா அவர்களைத் தமது பரிசுத்த ஆவியினால் நிறைத்தார். கர்த்தர் அவர்களைத் தம்முடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணினார். கர்த்தர் அவருடைய இரக்கத்தினால், அப்பா அவர்களைத் தமது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணி, அளவில்லாமல் ஆசீர்வதித்தார். முன்பு இருந்ததை விட அதிகமான சந்தோஷத்தினாலும் மகிழ்ச்சியினாலும் நிறைத்தார். பின்பு தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய சபையில் அவருடைய ஊழியத்தைச் செய்ய 01.03.1977 ல் ஊழியத்தில் சேர்ந்து கொண்டு கர்த்தரின் ஊழியக்காரராக ஊழியம் செய்ய ஆரம்பித்தார்கள். தேவனுக்கே மகிமை!

## 1.10 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் தேவ ஊழியக்காரராக உறுதிபடுத்தப்பட்டது

தேவனுடைய சித்தத்தின்படி சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களை சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள், சபையின் முக்கியமான அலுவல்களைச் செய்யும்படியாக 23.03.1977 அன்று உறுதிப்படுத்தினார்கள். சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த பிறகு கர்த்தர் அவருடைய இரக்கமுள்ள சித்தத்தின்படி சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களைத் தமது சபையின் முதன்மையான தேவ ஊழியக்காரராக நியமித்தார். கர்த்தர், அப்பா

அவர்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய மகிமையான வாக்குத்தத்தங்களின்படி கர்த்தர் தமது மகிமையான சபையில் நோயாளிகளையும், வியாதியஸ்தர்களையும் குணமாக்குதல், அநேக ஜனங்களிடமிருந்து அசுத்த ஆவிகளைத் துரத்துதல் போன்ற மகிமையான கிரியைகளைச் செய்து வருகிறார். தேவனுக்கே மகிமை!

## 1. 11 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களைக் குறித்ததான மகிமையான வாக்குத்தத்தங்கள்

24.05.1977 அன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களின் தீர்க்கதரிசனம் மூலமாக சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களைப் பற்றி அநேக வாக்குத்தத்தங்களைப் பேசினார். நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னது: "இவன் யார்? இவன் யார்? இவன் யார்? உலகத் தோற்றத்திற்கு முன்பே தெரிந்தெடுக்கப்பட்டவன், தாயின் கர்ப்பத்தில் உருவாகுமுன்னே நான் அவனை அறிந்திருக்கிறேன். தன் தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே நான் அவனை அழைத்தேன். அவனுடைய தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே நான் அவனைப் பிரித்தெடுத்தேன். நீ உன்னைச் சிறியவனென்றா எண்ணுகிறாய்? நீ சிறியவனல்ல, நீ பெரியவன் உலகத்துக்கேப் பெரியவன். உனக்கிருக்கிற இந்த பலத்தோடே போ. உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா? உனக்கு விசேஷித்த ஞானத்தைத் தருவேன். உனக்கு விசேஷித்த புத்தியைத் தருவேன். உனக்கு விசேஷித்த அறிவைத் தருவேன். நான் உன்னைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்வேன். நான் உன்னோடு இருக்கிறேன். எல்லாவற்றிலும் என்னுடைய ஊழியக்காரனை (சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களை) நினைத்துக் கொள்."

அப்பா அவர்களைப் பற்றிய இந்தத் தீர்க்கதரிசனத்தில் நம்முடைய கர்த்தராகிய தேவனாகிய இயேசு கிறிஸ்து சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களை எல்லாவற்றிலும் நினைத்துக் கொள்ளும்படி, அப்பா அவர்களிடம் கூறினார். (I கொரிந்தியர் 11 : 2) மேலும் இந்தத் தீர்க்கதரிசனத்தில் கர்த்தர் கிதியோனிடம் பேசினது போல, கர்த்தர் அப்பா அவர்களிடம் பேசினார். இந்தத் தீர்க்கத்தரிசனத்தில் கர்த்தர் கிதியோனை அனுப்பினது போல, கர்த்தர் அப்பா அவர்களை அனுப்பினார். கிதியோனின் அழைப்பைக் குறித்து *நியாயாதிபதிகள் 6 : 11 – 16* ல் குறிப்பிடப் பட்டுள்ளது. கர்த்தராகிய தேவன் கிதியோனை நோக்கிப் பார்த்து,

"*அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். நியாயாதிபதிகள் 6 : 14*

அப்பா அவர்கள் சிறுவனாக இருந்த போது, முதலார் ஆரம்பத் துவக்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், அப்பா அவர்களின் தகப்பனார் செங்கோடியிலுள்ள உயர்நிலைப் பள்ளியிலுள்ள வாக்குச் சாவடிக்கு வாக்குச் செலுத்தும்படி மாலை நேரத்தில் சென்றார்கள். அப்பா அவர்களும் தன் தகப்பனாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு அவருடன் சென்றார்கள். அப்பா அவர்களின் தகப்பனார் வாக்குச் செலுத்திய பின் இருவருமாக வாக்குச் சாவடியில் இருந்தனர். அந்த நேரத்தில் அவர்களது தொகுதி தேர்தல் வேட்பாளராகிய டாக்டர். N. A. நூர் முமம்மது வாக்குச் சாவடியை மேற்பார்வையிடும்படி அங்கே வந்தார். அப்பா அவர்களின் தகப்பனாரும் வேட்பாளரும் ஒருவருக்கொருவர் நன்கு பழக்கமுடையவர்கள். ஆகவே இருவரும் சந்தித்து ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

டாக்டர். N. A. நூர் முகம்மது சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களைக் கண்டபோது அவர்களைப் பற்றிக் கேட்டார். தகப்பனாரும் அவர்களைப் பற்றிக் கூறினார். உடனே டாக்டர். என். ஏ. நூர் முகம்மது அப்பா அவர்களின் காதுகளில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு "இவன் பெரிய மனிதனாக வருவான்" என்று கூறினார். பின்பு அவருடைய மலர் மாலைகளுள் ஒன்றையும், எலுமிச்சம் பழங்களையும் (நம்முடைய வட்டாரத்தில் உலகப் பிரகாரமாக வரவேற்பதற்கு உபயோகிக்கப்படும் சாதாரண மாலை) தனது காரிலிருந்து எடுத்து, அப்பா அவர்களின் கழுத்தில் அணிவித்தார். அவர்கள் எல்லாரும் பின்பு டாக்டர். N. A. நூர் முகம்மதுவின் காரில் தங்களுக்குப் பொருட்கள் வாங்குவதற்காக வேர்க்கிளம்பி வரை சென்றார்கள். வேட்பாளரான டாக்டர். N. A. நூர் முகம்மது அந்தத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றி அடைந்தார். அந்நேரத்தில் நம்முடைய அன்பின் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும், வழி நடத்துதலினாலும் டாக்டர். என். ஏ. நூர் முகம்மதுவால் அப்பா அவர்களைக் குறித்துப் புரிந்து கொள்ள முடிந்திருந்தது. நம்முடைய தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் எப்படிப்பட்ட அதிசயமான கிரியை இது!

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர். N. A. நூர் முகம்மது, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏல் பல்கலைக் கழகத்தின் திறமையான முன்னாள் மாணவர்; சோமாலிய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி; இந்திய மத்திய அரசு, பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்; கோழிகோடு பல்கலைக் கழகத் துணை வேந்தர் மற்றும் பலபதவிகளையும் வகித்தவர்.

## 1.12 சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களால் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள், மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு, அப்பா அவர்களிடம் சபையின் முத்திரைகள், ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டது

அதே நாளில் அதாவது 24.05.1977 ல் அப்பா அவர்களைப் பற்றிய மேற்கண்ட தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட பின்பு, அப்பா அவர்களின் தீர்க்கதரிசியும், வழிகாட்டியும், வழிநடத்துபவரும், ஆவிக்குரிய தந்தையுமான சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் தீமோத்தேயுவின் மீது பவுல் அப்போஸ்தலர் கைகளை வைத்தது போலவும் (*I தீமோத்தேயு 1 : 6*) மோசே தனது கைகளை யோசுவாவின் மீது வைத்தது போலவும் (*எண்ணாகமம் 27 : 15 – 23*) தன்னுடைய கைகளை அப்பா அவர்கள் மீது வைத்து இரண்டாவது முறையாக உறுதிப்படுத்தினார்கள். அதே நாளில், மலவிளையைத் தலைமையிடமாகக் கொண்ட ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் முத்திரைகள், ஆவணங்கள் அனைத்தையும் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அப்பா அவர்கள் தேவனுடைய விசேஷித்த ஞானத்தினாலும், தேவனுடைய விசேஷித்த புத்தியினாலும், தேவனுடைய விசேஷித்த அறிவினாலும் நிரப்பப்பட்டு, தெய்வீகமான தேவ ஊழியத்தைச் செய்யவும், தேவனுடைய பெரிய காரியங்களை நடப்பிக்கவும், அப்பா அவர்களுடைய தீர்க்கதரிசியும், வழிகாட்டியும், வழிநடத்துபவரும் ஆத்மீகத் தகப்பனுமாகிய சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுக்கு, தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் அருளப்பட்ட ஆசீர்வாதங்களே, மிகப் பெரிய பொக்கிஷமாகவும், வெகுமதியாகவும் காணப்பட்டன. *"சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான், அதற்குச் சந்தேகமில்லை" எபிரெயர் 7 : 7.* தேவனுக்கே மகிமை!

## 1.13 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் புஸ்தகம் எழுதுவதைக் குறித்து சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட மகிமையான தரிசனம்

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் 'தேவ இரகசியத்தை வெளிப்படுத்தும் பத்திரம்' என்ற புஸ்தகத்தை எழுதுவதைக் குறித்து தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார். இந்தத் தெய்வீக வெளிப்பாட்டின்படி அப்பா அவர்களால் இந்த விலை மதிப்பற்ற, அரிய புஸ்தகமாகிய 'ஒன்றே குலம் !! ஒருவரே தேவன் !!' என்ற புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

24.05.1977 ல் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் மூலம் நம்முடைய மிகவும் அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பேசி அறிவித்த தீர்க்கதரிசனத்தின் படி, அப்பா அவர்களுக்குக் கர்த்தர் தம்முடைய மிகப் பெரிய செயல்களுள் ஒன்றான கர்த்தருடைய தெய்வீக புஸ்தகமாகிய 'தேவ இரகசியத்தை வெளிப்படுத்தும் பத்திரமாகிய விலை மதிப்பற்ற அரிய புஸ்தகமாகிய, தெய்வீக புஸ்தகமாகிய ஒன்றே குலம்!! ஒருவரே தேவன்!! என்ற புஸ்தகத்தை எழுதுவதற்கு ஏற்ற விசேஷித்த ஞானம், விசேஷித்த புத்தி, விசேஷித்த அறிவு ஆகியவற்றை அளித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி கனம் மகிமை சதா காலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

## 1.14 திட்டமிடுபவனாகிய சாத்தான், பிசாசு சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களைக் கொலை செய்யும்படி பலமுறை திட்டமிட்டது

"*அவர் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை எனக்குக் காண்பித்தார்; அவன் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான்; சாத்தான் அவனுக்கு விரோதஞ்செய்ய அவன்வலது பக்கத்திலே நின்றான்.*" *சகரியா 3 : 1*

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நம்முடைய மிகவும் அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் முன் குறிக்கப்பட்டவர்கள். (*எபேசியர் 1:4 - 6*); அவர்கள் விசேஷமான விதமாக தாயின் கர்ப்பத்தில் அவருடைய ஊழியக்காரர்களாக கர்த்தரால் உருவாக்கப்படுகிறார்கள் (*ஏசாயா 49:5*); அவர்கள் பிறக்குமுன்பே அவர்களுடைய பெயர்கள் கர்த்தரால் அறிவிக்கப்படுகிறது (*ஏசாயா 49 : 1*). எனவே பிசாசாகிய சாத்தானும் கர்த்தருடைய ஊழியக்காரர்களின் பிறப்பைக் குறித்து, அவர்கள் பிறப்பதற்கு முன்னாக அறிந்து கொண்டவன். ஆகவே அவர்கள் பிறப்பதற்கு முன்பு இருந்தே கேடு நிறைந்த பிசாசாகிய, பயங்கரமாக திட்டமிடுபவனாகிய சாத்தான் கர்த்தருடைய ஊழியக்காரர்களை கொலை செய்யச் சதித்திட்டம் செய்கிறான். எவ்வளவு கேடு நிறைந்த கொடிய செயல்களைச் செய்யும் கொடியவன் சாத்தான்! இப்படிப்பட்ட மிகவும் ஆபத்துகுரியதும், பயங்கரமுமான சூழ்நிலைகளிலும் நம்முடைய மிகவும் அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தமது பரலோகத்தின் தூதர்களைக் கொண்டு தேவ ஊழியக்காரர்களை மறைமுகமாகவும், இரகசியமாகவும் காப்பாற்றுகிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

அப்பா அவர்கள் பிறந்த போது பயங்கரமாக திட்டமிடுபவனாகிய பிசாசாகிய சாத்தான் மருத்துவச்சியின் அலட்சியப் போக்கினால், அவர்களைக் கொலை செய்யும் படியாகத் திட்டமிட்டான். அவர்களது தாயார் அப்பா அவர்களைப்

பெற்றெடுத்தவுடன் அந்த மருத்துவச்சி தொப்புள் கொடியை மிக அலட்சியமாக வெட்டினாள். அதனால் அவர்களின் இரத்தம் ஏறக்குறைய எல்லாம் சிந்தப்பட்டு அப்பா அவர்கள் மரிக்கும் தருவாயில் இருந்தார்கள். அப்பா பிறந்த அந்த நேரத்தில் அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய தெய்வீகக் கிருபையினால் அப்பா அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

பிறகு அப்பா அவர்கள் சிறு குழந்தையாக இருக்கும் போது, ஒரு ஸ்திரீ அவர்களை மிகவும் நேசித்து, அன்போடு அவர்களை கவனித்து அரவணைத்து வந்தார். அவளுடைய மனதில் பிசாசாகிய சாத்தான், பயங்கரமாகத் திட்டமிடுபவன், அப்பா அவர்களைக் கொல்ல வேண்டும் என்ற ஒரு மிகவும் தீதான, கொடுமையான எண்ணத்தைக் கொண்டு வந்தான். அந்தத் தீதான கொடுமையான நினைவு என்னவென்றால் "அவர்கள் ஒரு பெரிய மனிதனாவார். ஆகவே நான் அவர்களைக் கொல்ல வேண்டும்." பயங்கரமாகத் திட்டமிடுபவனாகிய, பிசாசாகிய சாத்தானின் மூலமாய் தீட்டப்பட்ட பயங்கரமானத் திட்டத்திலிருந்து, மிகவும் அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய தெய்வீகக் கிருபையினால் அப்பா அவர்களை மரணத்தினின்று காப்பாற்றினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

அப்பா அவர்களுடைய குழந்தைப் பருவ நாட்களிலும், பிள்ளைப் பருவ நாட்களிலும் தேவனுடைய தெய்வீகக் கிருபையினால் ஏறக்குறைய எல்லாராலும் அப்பா அவர்கள் மிகவும் நேசிக்கப்பட்டார்கள். மிகவும் அன்பான கர்த்தரும் தேவனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்போதும் அவர்களோடு கூட இருந்து அவருடைய தெய்வீகக் கிருபையினால் அப்பா அவர்களை எல்லாத் தீங்குக்கும்

விலக்கிக் காத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

அதன் பிறகும் பயங்கரமான திட்டங்களைத் தீட்டுபவனாகிய பிசாசாகிய சாத்தான் அப்பா அவர்களை அழிக்கும்படி அவனுடைய மக்களின் மனதில் தீங்கான கேடான நினைவுகளைக் கொண்டு வந்தான். இத்தகைய எல்லாக் காரியங்களிலும் அப்பா அவர்களின் அன்பின் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய தெய்வீகக் கிருபையினால் அப்பா அவர்களை மரணத்தினின்று காப்பாற்றினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

ஒருமுறை சென்னை, எக்மோர் என்ற இடத்தில் ஒரு ஒழுங்கற்ற, கவனமற்ற ஓட்டுநரால் கார் விபத்தின் மூலமாக அப்பா அவர்களைக் கொலை செய்யப் பயங்கரத் திட்டமிடுபவனாகிய பிசாசாகிய சாத்தான் திட்டமிட்டிருந்தான். அதிலும் அன்பின் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய தெய்வீகக் கிருபையினால் அப்பா அவர்களை மரணத்தினின்று காப்பாற்றினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

2011 ம் ஆண்டிலும் பயங்கர திட்டமிடுபவனாகிய பிசாசாகிய சாத்தான் கேடான மனிதர்கள் மூலமாக அவனுடைய கூலிப்படையினரை (குண்டர்களை) கொண்டு இரக்கமின்றி இரத்தப்பணம் கொடுத்து அப்பா அவர்களைப் படுகொலை செய்யும்படி அனுப்பினான். அதிலும் மிகவும் அன்பான சிநேகமுள்ள தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அப்பா அவர்களைப் படுகொலை செய்வதினால் ஏற்பட இருந்த மரணத்தினின்றும் பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

## 1.15 தீபகற்க இந்தியாவின் தென்கோடி முனையான கன்னியாகுமரி – குமரி முனையிலிருந்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அப்பா அவர்களை சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் மூலமாகக் கொள்ளையர்களின் கைகளிலிருந்து காப்பாற்றியது

*"திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை"*

*I கொரிந்தியர் 6 : 10*

ஒருநாள் மாலை வேளையில் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களின் விசேஷமான நிகழ்ச்சியை முடித்துவிட்டு, கன்னியாகுமரிக் கடலின் கடற்காற்றுக்காக ஒரு காரில் ஐயா அவர்களுடன் அப்பா அவர்களும் வேறு சிலருமாக கன்னியாகுமரிக்குச் சென்றார்கள். அங்கு அழகான சூரிய அஸ்தமனம் ஆரம்பமானதைக் கண்டார்கள். அந்த நேரத்தில் கடற்கரையின் மேற்கே சில மணல்குன்றுகள் காணப்பட்டன. அந்த சாலையும் ஒரு மணல்குன்றுக்கு அருகில் முடிவடைந்தது. அவர்கள் அந்தச் சாலை முடிவடையும் இடத்திற்குச் சற்று தூரத்திலிருந்த மணல்குன்றின் மீது அமர்ந்து மிகவும் அழகானக் கடல் அலைகளையும் அவர்களுக்கு வலதுபுறமாக இருந்த அழகானச் சூரிய அஸ்தமனத்தையும் அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பின்புறம் நீண்ட தொடர்ச்சியான அடர்ந்த முட்புதர் காணப்பட்டது. அவர்கள் கடற்காற்றுக்காக அங்கேயே அமர்ந்திருந்தனர்.

ஆரம்பத்தில் எண்ணற்ற சுற்றுலாப் பயணிகள் அங்கு காணப்பட்டனர். சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பு அவர்கள் அந்த இடத்தை விட்டுச் செல்ல ஆரம்பித்தனர். கடைசியில் அவர்களைத் தவிர வேறு எவருமில்லை. அவர்கள் அங்கே கடற்காற்றிற்காக உட்கார்ந்து இருந்தனர்.

அப்போது அவர்களிடம் விசேஷமாகச் சொல்லத்தக்கதாக அகாய் கேசட் பிளேயர் கம் ரிகார்டர் மட்டுமே இருந்தது. அந்தக் காலத்தில் அவர்களுடைய பகுதியில் இந்த அகாய் செட் ஒரு அரிய விலையேறப் பெற்றப் பொருளாகக் காணப்பட்டது. கொள்ளையர்கள் அதை மாலையிலேயே பார்த்து விட்டார்கள். ஆகவே, எப்படியும் அகாய் செட்டைக் கொள்ளையிட வேண்டுமென்று விரும்பினர். மேலும் அவர்களிடம் கொள்ளையடிப்பதற்குப் பெரிய அளவிலான பணமும் இருக்குமென்று எண்ணி அங்கு வந்தனர்.

சில கொள்ளையர்கள் ஒரு வாகனத்தில் வந்து அந்தச் சாலை முடிவில் வாகனத்தை நிறுத்திவிட்டுக் கூலியாட்களைப் போன்று கடற்கரையிலிருந்து கொஞ்சம் மணலை வாகனத்தில் ஏற்ற ஆரம்பித்தனர். சிறிது நேரம் கழித்து அவர்களுக்குப் பின்புறத்திலுள்ள மேற்சொன்ன அடர்ந்த முட்புதர் பகுதியிலிருந்து சில கொள்ளையர்கள் வந்து கூலியாட்களைப் போன்று தங்கள் வாகனத்தில் மணல் ஏற்றிக் கொண்டிருந்த தங்கள் உடன் கொள்ளைக்காரர்களுக்கு சமிக்ஞை கொடுத்துக் கொண்டே உட்கார்ந்து இருந்த அவர்களுக்குப் பின்புறமாக வந்தனர்.

அப்போது சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் அந்த மனிதர்களை தங்களை கொள்ளையடிக்க வந்த கொள்ளையர்கள் என்று சரியாக அறிந்து கொண்டார்கள். ஐயா அவர்கள் உடனிருந்தவர்களிடம் "எழும்புங்கள் நாம் போவோம்" என்றார்கள். உடனடியாக அவர்கள் ஐயா அவர்களுடன் எழுந்துச் சென்றார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

அவர்களுக்கு முன்பாகக் கடல் இருந்தது. அவர்களுடைய பின்புறம் தொடர்ந்த, நீண்ட, அடர்ந்த முட்புதர் இருந்தது. அவர்களது வலது புறம் மணற்குன்றுகள் இருந்தன. சரியான பாதையும் இல்லை. இடதுபுறமாகச் சென்றால் மட்டுமே சாலையின் முடிவிலுள்ள அவர்களுடைய கார் இருக்கும் இடத்திற்குச்

செல்ல முடியும். ஆனால் அந்த வழியில் சில கொள்ளையர்கள் தங்களுடைய வாகனத்தில் மணல் ஏற்றிக் கொண்டு சாதாரண கூலியாட்களைப் போல் தங்களைக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய காரின் அருகில் சென்று ஏறிக் கொள்வதற்கு மிக குறுகலான பாதை மட்டுமே இருந்தது.

ஐயா அவர்கள் அப்பா அவர்களுக்கு முன்னாகச் சென்றார்கள். மற்றவர்கள் அவர்களை நெருங்கிப் பின்தொடர்ந்தனர். ஐயா அவர்கள் அந்தக் கொள்ளையர்களின் அருகில் சென்ற போது அந்தக் கொள்ளையர்கள் திடீரென்று திடுக்கிட்டு இருண்டு, வெளிறிய முகங்களுடன் மிக விலையேறப் பெற்ற விலையுயர்ந்தப் பொருளைத் தொலைத்து விட்டதுபோல் விலகி நின்றார்கள். கர்த்தருடைய தெய்வீகக் கிருபையினால் அந்தக் கொள்ளையர்கள் அவர்களுக்கு எந்தத் தீங்கோ, காயமோ, அழிவோ ஏற்படுத்த முடியவில்லை. ஆத்மீகத் தகப்பனாகிய சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் மூலமாக அந்த இடத்தில் மிகவும் அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர்களைக் கொள்ளையர்களின் கைகளிலிருந்து பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு, ஸ்தோத்திரம், துதி கனம் மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

இந்திய தீபகற்பத்தின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி – குமரிமுனைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இது ஒரு முக்கியப் பாடமாகும். ஒவ்வொரு சுற்றுலாப் பயணியும் முக்கிய சுற்றுலாத் தலங்களுள் ஒன்றான கன்னியாகுமரியைப் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டு எல்லா இடங்களிலும் எல்லாக் காரியங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். மேலும் கடலில் குளிக்கும் போதும் கடற்கரையின் அருகில் செல்லும் போதும் எந்த நேரத்திலும் காற்றினாலுண்டாகும் கடல் அலைகளை பற்றியும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணியும் கவனமாக இருக்க

வேண்டும். மேலும் பாதுகாப்பான குளிப்பிடங்களைத் தவிர வேறு எங்கும் சுற்றுலாப் பயணிகள் குளிக்கவே கூடாது.  ஒவ்வொரு சுற்றுலாப் பயணியும் கன்னியாகுமரிக் கடலில் குளிப்பதைத் தவிர்ப்பது நல்லது. மற்றபடி பயங்கரமான ஆபத்துகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் தப்ப முடியாது. இக்காலங்களில் திருடர்கள், கொள்ளையர்கள், கூலிப்படையினர், ஏமாற்றுபவர்கள் எங்கும் காணப்படுகின்றனர். எனவே எப்போதும் கவனத்தோடும், கர்த்தருடைய வழி நடத்துதல், பாதுகாவலுக்காக ஜெபத்தோடும் காணப்பட வேண்டும். இவைகளெல்லாம் மிகவும் அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எச்சரிக்கைகள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

## 1.16 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் ஒரு சிறிய, பரிசுத்தமான, உண்மையான சாட்சி

*"பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது"* *எபேசியர் 3 : 8*

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் தேவனுடைய எல்லாச் சாட்சிகளுக்குள்ளும் ஒரு சிறிய சாட்சியும், கர்த்தராகிய தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் ஒரு பரிசுத்தமான சாட்சியும், உண்மையுள்ள சாட்சியுமாவர். தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அப்பா அவர்களை இந்த உலகில் தம்முடைய பரிசுத்தமான சாட்சியாகவும், தம்முடைய உண்மையான சாட்சியாகவும்

நடத்திக் கொண்டிருந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

அப்பா அவர்கள் கர்த்தரும் தேவனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பார்த்ததில்லை. ஆனால் ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய பரிசுத்த வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்தைக் குறித்தும் அப்பா அவர்களுக்குத் திட நம்பிக்கை (விசுவாசம்) உண்டு. மேலும் மலவிளையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையாகிய, கர்த்தருடைய சபையைக் குறித்தும் மலவிளையில் உள்ள கர்த்தருடைய ஊழியத்தைக் குறித்தும், கர்த்தருக்குள் நித்திரையடைந்த கர்த்தருடைய ஊழியக்காரராகிய சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்தும், கர்த்தருடைய சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களைக் குறித்தும், ஐயா அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைக் குறித்தும், அப்பா அவர்கள் திட நம்பிக்கை (விசுவாசம்) உடையவர்களாக *யோவான் 14 : 12 - 14* ல் சொல்லியுள்ளபடி காணப்பட்டார்கள்.

மேலும் கர்த்தருடைய மகிமையான கிரியைகளாகிய முன்மாரி மழை, பின்மாரி மழைகளைக் (*யோவேல் 2 : 23 ; சகரியா 10 : 1*) குறித்தும் மலவிளையிலுள்ள கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையிலிருந்து இந்த இரண்டு மழைகளும் துவங்குவதைக் குறித்தும் திட நம்பிக்கை (விசுவாசம்) உடையவர்களாய் அப்பா அவர்கள் காணப்பட்டார்கள். மலவிளை, இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளது. கன்னியாகுமரி (குமரிமுனை) தீபகற்ப இந்தியாவின் தென்கோடி முனையில் உள்ளது. மேலும் அப்பா அவர்கள் எழுதியுள்ள "ஒன்றே குலம் ஒருவரே தேவன்" –

*"தேவனுடைய இரகசியத்தை வெளிப்படுத்தும் பத்திரம்"* என்ற விலையேறப் பெற்ற புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள எல்லாக் காரியங்களைக் குறித்தும் திட நம்பிக்கை (விசுவாசம்) உடையவர்கள் அப்பா அவர்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் சொல்லப்பட்டிருப்பது போல:

*"... காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்"*

*யோவான் 20 : 29*

கர்த்தர் அப்பா அவர்களை மிகவும் ஆசீர்வதித்துக் கொண்டேயிருந்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர்களை அவருடைய பிள்ளைகளுக்கு ஒரு ஆவிக்குரிய தகப்பனாக ஏற்படுத்தினார். ஜனங்கள் அவர்களை 'அப்பா' என்றும் 'ஐயா' என்றும் அழைத்தனர். குடும்பத்தின் தகப்பனை அன்போடும் நெருக்கத்தோடும் அழைக்கும் அரமேயு உள்நாட்டு வார்த்தை தான் 'அப்பா' என்பது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பேசப்பட்டு வந்த எபிரெய மொழியின் ஒரு வடிவம் தான் அரமேயு. 'அப்பா' என்ற வார்த்தை இந்தியாவிலும் உபயோகப்படுத்தப் படுகிறது.

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மெய்யான (உண்மையான) சாட்சி. ஒருமுறை அப்பா அவர்கள் மற்ற உடன் தேவ ஊழியக்காரர்களுடன் இருக்கும் போது சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் அப்பா அவர்களைப் பற்றிச் சாட்சியாகச் சொன்னது:

"செல்வராஜ் உண்மையுள்ளவனென்று எனக்குத் தெரியும்; ஆனால் இவ்வளவு உண்மையுள்ளனென்று எனக்குத் தெரியாது."

இதற்காகப் பவுல் அப்போஸ்தலர் நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்திரித்துத் துதித்தது போல, அப்பா அவர்களும் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஸ்தோத்திரித்துத் துதித்தார்கள்.

"*என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்*" *I தீமோத்தேயு 1 : 12*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய உண்மையுள்ள சாட்சியாகிய அந்திப்பாவைக் குறித்து சாட்சியிடுகிறார்.

"*எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் ...* " *வெளி 2 : 13*

தேவனுடைய பரிசுத்த வார்த்தையாகியப் பரிசுத்த வேதாகமம் இப்படிச் சொல்லுகிறது.

"*உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.*"

*நீதிமொழிகள் 28 : 20*

தேவனுடைய பரிசுத்த வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் இப்படிக் கேட்கிறது.

"*உண்மையான மனுஷனைக் கண்டு பிடிப்பவன் யார்?*"

*நீதிமொழிகள் 20 : 6*

கர்த்தராகிய தேவனாகிய இயேசு கிறிஸ்து அவருடைய சபையை அவருடைய மகிமையான பாதையில் மிகவும் ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார். தேவன் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தச் சித்தமாய் உலகில் பலவீனமான, இழிவான, அற்பமான, ஒன்றுமற்றதுமான (சூன்யம்) அப்பா

அவர்களைத் தேவன் தெரிந்து கொண்டார் என்று அப்பா அவர்களே சாட்சியாக கூறினார்கள். (*I கொரிந்தியர் 1 : 26 – 31 ; ரோமர் 9 : 23*) தேவனுக்கே மகிமை!

"*முடிவு பரியந்தம் இடைவிடாமல் உம்முடைய பிராமாணங்களின்படி செய்ய என் இருதயத்தைச் சாய்த்தேன்.*" *சங்கீதம் 119 : 112*

## 1. 17 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் கர்த்தருடைய சபைக்காகவும், கர்த்தருடைய ஊழியத்திற்காகவும் அநுபவித்த, பாடுகள், பிரயாசங்கள், வேதனைகள், உபத்திரவங்கள்.

"*நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப் படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.*"

*2 கொரிந்தியர் 4 : 8 – 10*

சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த பின்பு அவர்கள் கடைசியாகப் பேசின தீர்க்கதரிசனம், மலவிளையைத் தலைமையிடமாகக் கொண்ட கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையில், கர்த்தருடைய ஊழியத்தில் நிறைவேறத் தொடங்கியது. அநேகக் கள்ள ஊழியக்காரர்கள், கள்ள விசுவாசிகள் சிதறடிக்கப்பட்டு இந்தச் சபையிலிருந்தும், சபையின் ஊழியத்திலிருந்தும் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல அலைந்து திரிய ஆரம்பித்தார்கள்.

சிதறடிக்கப்பட்ட கள்ள விசுவாசிகள் மற்றும் அவர்கள் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பலரது உதவியுடன் சில சிதறடிக்கப்பட்ட கள்ள

ஊழியக்காரர்கள் சில கிளைச் சபைகளை அபகரித்து (கைப்பற்றி)க் கொண்டு தன்னிச்சையாக சபை ஆராதனைகளை நடத்தினர். அப்பா அவர்களுக்கு எதிராகப் பொய் உரிமையியல் வழக்குகளைப் பதிவு செய்தும் பொய் உரிமையியல் புகார்களை பல இடங்களிலும் தொடர்ந்தனர். சிதறடிக்கப்பட்ட கள்ள ஊழியக்காரர்கள் சபையை முழுமையாக நீதிமன்றத்தின் கண்காணிப்பில் கொண்டு வரப் பலப் பொய்யான சிவில் வழக்குகளைத் தொடர்ந்தனர். என்ன பயங்கரமான செயல் இது!

இதற்கு முன்பே சிதறடிக்கப்பட்ட கள்ள ஊழியக்காரர்கள் தங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வெளியிலுள்ளவர்களின் உதவியுடனும் ஆதரவுடனும்; சிதறடிக்கப்பட்ட கள்ள விசுவாசிகள், அவர்களுடைய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வெளியிலுள்ளவர்களின் உதவியுடனும், ஆதரவுடனும் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் கட்டுப்பாடற்ற நிலைமையையும், குழப்பங்களையும் ஏற்படுத்தினர். சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுக்குப் பயங்கரமான எதிரியான அவர்களுடைய மகனும் அப்பா அவர்களுக்கு எதிராக சில பொய்யான குற்றவியல் வழக்குகளைத் தொடர்ந்தான். மேலும் சிதறடிக்கப்பட்ட கள்ள ஊழியக்காரர்களுக்கு தன்னுடைய உதவியையும் ஆதரவையும் கொடுத்தான். பின்பு அவன் சபைச் சொத்துகளுக்காக அப்பா அவர்களுக்கு எதிராகவும் ஒரு பொய்யான உரிமையியல் வழக்கை நீதிமன்றத்தில் தொடர்ந்தான்.

கடைசியாகச் சில கள்ள, ஏமாற்றுத்தனமான, கட்டுப்பாடற்ற, ஒழுங்கற்ற கீழ்ப்படியாத ஊழியக்காரர்கள் கர்த்தருடைய சபையாகிய மலவிளை ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் குடியிருப்பில் தங்கிக் கொண்டு அப்பா அவர்களுக்கு எதிராகவும், சபைக்கும், சபையின் ஊழியத்திற்கும் எதிராகவும் எண்ணற்றப் பொய்யான குற்றவியல் வழக்குகளை அப்பா அவர்களின்

நற்பெயரையும், கர்த்தருடைய சபையின், சபை ஊழியத்தின் நற்பெயரையும் கெடுக்கும் கெட்ட நோக்கத்தோடு தொடர்ந்தனர். மேலும் அப்பா அவர்களுக்கு மரணத்தண்டனை அல்லது ஆயுள் தண்டனை பெற்றுத் தர பயங்கரமான கொடிய சதி செய்து அப்பா அவர்களுக்கும், சபைக்கும் ஊழியத்திற்கும் அதிகமான கேடுகளைச் செய்தனர். மேலும் அவர்கள் கள்ளத்தனமான, ஏமாற்றுத் தனமான, கட்டுப்படுத்த முடியாத, கட்டுப்பாடற்ற, கீழ்ப்படியாத ஊழியக்காரர்களின் தலைவனுடைய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வெளியில் உள்ளவர்கள், முக்கியமாகக் கர்த்தருடைய சபையின் முழுமையான அழிவுக்கான கெட்ட எண்ணமுடைய சபைக்குச் சத்துருவானவர்களின் உதவியுடனும் ஆதரவுடனும் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஒழுங்கின்மையையும், குழப்பங்களையும் ஏற்படுத்தினர். எவ்வளவு கவலைக்குரிய செயல் இது!

மேலே சொல்லப்பட்டுள்ள கள்ளத்தனமான ஏமாற்றுத்தனமான, கட்டுப்படுத்த முடியாத, கட்டுப்பாடற்ற, ஒழுங்கற்ற, கீழ்ப்படியாத ஊழியக்காரர்களின் தலைவன் கர்த்தருடைய சபையின் நிர்வாகத்தை அப்பா அவர்களிடமிருந்து அபகரிக்கும் கெட்ட எண்ணத்தோடு அப்பா அவர்களுக்கும், சபைக்கும், ஊழியத்திற்கும் எதிராக மிகவும் தந்திரமாக வழக்கு தொடரத் தொடங்கினான். அப்பா அவர்களுக்குப் பன் மடங்கு மரண தண்டனை அல்லது பன்மடங்கு ஆயுள் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற பயங்கரமான சதியோடு அப்பா அவர்களுக்கும், சபைக்கும், ஊழியத்திற்கும் எதிராக அதிகமதிகமாய்க் கேடும் தீங்கும் செய்தான். மேலும் அவன் துணிச்சலோடு சில கள்ளத்தனமான, ஏமாற்றுத்தனமான, கட்டுப்பாடற்ற, கட்டுப்படுத்த முடியாத, கீழ்ப்படியாத ஊழியக்காரர்களின் உதவியுடனும், ஆதரவுடனும், உறவினர்கள் நண்பர்கள் மற்றும் அநேக ஜனங்களின் உதவியுடனும் ஆதரவுடனும் சபைக் குடியிருப்பின் உள்ளேயும், வெளியேயும் அதிகமதிகமான கேட்டையும், தீங்கையும், கட்டுப்பாடற்ற நிலைமையையும், குழப்பத்தையும் உண்டு

பண்ணினான். அவன் துணிகரமாக நேரடியாகவும், மறைமுகமாகவும் அநேக அரசு உயர் அதிகாரிகளுக்கும், அநேக அரசு துறைகளுக்கும் அப்பா அவர்களுடைய நற்பெயரைக் கெடுக்கவும், கர்த்தருடைய சபையையும் அதன் ஊழியத்தையும் முற்றிலுமாகக் கெடுக்கவும், சபையின் நிர்வாகத்தை அபகரிக்க (கைப்பற்ற) ஒரு கருவியாக மீண்டும், மீண்டும் பல பொய்யான குற்றவியல் வழக்குகளையும் புகார்களையும் மிகவும் தந்திரமாக, மலவிளை சபையின் குடியிருப்பில் தங்கி இருந்து கொண்டே தொடர்ந்தான்.

பின்பு மற்றுமொரு கள்ளத்தனமான, ஏமாற்றுத்தனமான, கட்டுப்படுத்த முடியாத, கட்டுப்பாடற்ற, கீழ்ப்படியாத ஊழியக்காரன் இவனுடன் சேர்ந்து கொண்டு மலவிளை சபையின் குடியிருப்பில் இருந்து கொண்டே, அப்பா அவர்களின் நற்பெயரையும், கர்த்தருடைய சபையையும் அதன் ஊழியத்தின் நற்பெயரையும் கெடுக்கும் தீய நோக்கத்துடன் அந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவனுடைய தூண்டுதலின் பேரிலும் அவனுடைய உதவி, ஆதரவுடனும் பொய்யான குற்றவியல் புகார்களை அப்பாவுக்கு எதிராகவும், கர்த்தருடைய சபைக்கும் அதன் ஊழியத்துக்கும் எதிராகவும் கெடுக்க ஆரம்பித்தான். எவ்வளவு கள்ளத்தனமான, ஏமாற்றுத்தனமான, கட்டுப்படுத்த முடியாத, கட்டுப்பாடற்ற கீழ்ப்படிதலற்ற ஊழியக்காரன் அவன்!

மேலும் ஏற்கனவே அவனுடன் சேர்ந்திருந்த வேறொரு பொய்யான கட்டுப்படுத்த முடியாத, கட்டுப்பாடற்ற, கீழ்ப்படியாத, கொடூரமான ஏமாற்றுக்கார துன்மார்க்கனான ஆபத்தான, ஊழியக்காரன் இவர்களோடு சேர்ந்து கொண்டு மலவிளையின் ஊழியர் குடியிருப்பில் இருந்து கொண்டே, அப்பா அவர்களின் நற்பெயரையும் கர்த்தருடைய சபையையும், அதன் ஊழியத்தின் நற்பெயரையும் கெடுக்கும் நோக்கத்தோடு பொய்யான குற்றவியல் வழக்குகளையும், குற்றவியல் புகார்களையும் அப்பா அவர்களுக்கு எதிராகவும், கர்த்தருடைய சபைக்கும், அதன்

ஊழியத்துக்கும் எதிராகவும் கொடுக்க ஆரம்பித்தான். அவன் அநேக அரசு மேலதிகாரிகளுக்கும், அநேக அரசு துறைகளுக்கும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வரையிலும் அநேக பொய்யான குற்றவியல் புகார்களையும் கொடுத்தான். அப்பா அவர்களின் நற்பெயரையும் கர்த்தருடைய சபையையும், அதன் ஊழியத்தின் நற்பெயரையும் முழுவதுமாகக் கெடுக்கும் நோக்கத்தோடு பொய்யான, ஏமாற்றுக்காரத் தலைவனின் தூண்டுதலினாலும், உதவியுடனும் ஆதரவுடனும் பொய்யான காரியங்களைத் துணிச்சலோடு பேசியும், அநேக பொய்யான, தீமையான குற்றவியல் வழக்குகளையும், குற்றவியல் புகார்களையும் அனுப்பிக் கொண்டு சபைக் குடியிருப்பின் உள்ளேயும் வெளியேயும் மிகுந்த கட்டுப்பாடற்ற நிலைமையையும் குழப்பத்தையும் உண்டு பண்ணினான். இதற்கு முன்பு அவன் எவ்வித தயக்கமுமின்றி தன் உடன் ஊழியர்கள் சிலரைப் பலமாகத் தாக்கி பலத்த உட்காயங்களை ஏற்படுத்தினான். மேலும் அப்பா அவர்களைத் தன்னுடைய கொடிய, துன்மார்க்கக் கைகளால் மிகுந்த கோபத்தோடு தாக்க வந்த போது G. ராஜையன் பிரசங்கியார் என்ற தேவனுடைய ஊழியக்காரர் மூலமாகச் சரியான நேரத்தில் அப்பா அவர்களை மிகவும் அன்பான தேவனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கிருபையாய்த் தடுத்து அவனுடைய துன்மார்க்கக் கைகளிலிருந்து அப்பா அவர்களைப் பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! எப்படிப்பட்ட ஆபத்தான கொடிய விஷம் நிறைந்த துன்மார்க்க ஊழியக்காரன் அவன்!

இதற்கு முன்பு அப்பா அவர்களின் நற்பெயரையும், கர்த்தருடைய சபையையும் அதன் ஊழியத்தின் நற்பெயரையும் முற்றிலுமாய்க் கெடுக்கும்படி இந்தப் பொய்யான, ஏமாற்றுத்தனமான, தலைவனுடைய தூண்டுதலினாலும் ஒரு சிதறடிக்கப்பட்ட பெண் ஊழியக்காரி துணிகரமாக அப்பா அவர்களுக்கு எதிராகவும்

கர்த்தருடைய சபைக்கும், அதன் ஊழியத்துக்கும் எதிராகவும், பொய்யான, தீய குற்றவியல் புகார்களைப் பல அரசு அதிகாரிகளுக்கும் பல அரசுத் துறைகளுக்கும் கொடுத்தாள்.

அப்பா அவர்களின் நற்பெயரையும், கர்த்தருடைய சபையையும் அதன் ஊழியத்தின் நற்பெயரையும் முற்றிலுமாகக் கெடுக்கும்படியாக இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவனின் சில உறவினர்கள், நண்பர்கள், அண்டை வீட்டார், வெளியில் உள்ளவர்கள் மற்றும் வேறு சத்துருக்கள் துணிச்சலாக எண்ணற்ற பொய்யான குற்றவியல் புகார்களைப் பல உயர் அதிகாரிகளுக்கும், பல அரசுத் துறைகளுக்கும் இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவன் மற்றும் அவனுடைய ஆதரவாளர்களின் தூண்டுதலின் பேரில் அப்பாவுக்கு எதிராகவும். கர்த்தருடைய சபைக்கும் அதன் ஊழியத்துக்கும் எதிராகவும் கொடுத்தார்கள்.

மேலும் கர்த்தருடைய சபையின் சத்துரு ஒருவன் இந்தப் பொய்யான, ஏமாற்றுக்காரத் தலைவனின் தூண்டுதல், உதவி, ஆதரவுடன் அப்பா அவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை பெற்றுத் தரும்படியாக பயங்கரமான சதியுடன் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு பொய்யான கேடுவிளைவிக்கும், ஏமாற்றுத்தனமான கிரிமினல் OP கொடுத்தான். மேலும் மற்றொருவன் அப்பா அவர்களைப் பொதுமக்கள் முன்பிலும், அரசு அதிகாரிகள் முன்பிலும், சென்னை உயர்நீதிமன்றம் முன்பிலும் அவமானப்படுத்தும் வகையிலும், வெட்கப்படுத்தும் வகையிலும் ஒரு குற்றவியல் புகாரை அப்பா அவர்களுக்கு எதிராகச் சென்னை உயர்நீதிமன்றத்தில் கொடுத்தான்.

இந்தக் கள்ளத்தனமான, ஏமாற்றுக்காரத் தலைவனும் வேறொரு ஆபத்துக்குரிய, கொடிய விஷம் நிறைந்த, துன்மார்க்க ஊழியக்காரனும், மலவிளையிலுள்ள கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சபைக்

குடியிருப்பின் உள்ளே இருந்து கொண்டே கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளுடன் அப்பா அவர்களுக்கு எதிராக மீண்டும், மீண்டும் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் எண்ணற்ற பொய்யான குற்றவியல் வழக்குகளைத் தொடர்ந்தான். அவர்களுள் ஒருவனான இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவன் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் அப்பா அவர்களுக்கு எதிராகவும், கர்த்தருடைய சபைக்கும், அதன் ஊழியத்துக்கும் எதிராகவும் ஒரு பொய்யான உரிமையியல் மேல்முறையீடு மனுவைக் கொடுத்தான். சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுடைய மகன் ஐயா அவர்களுக்குக் கொடிய சத்துரு, இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவனோடு இரகசியமாகச் சேர்ந்து கொண்டு மறைமுகமாக இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவனுடைய சகோதரன் மூலமாக இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவனுக்குத் தேவையான உதவிகளையும் ஆதரவுகளையும் செய்து கொடுக்க ஆரம்பித்தான்.

இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவன் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் குறிப்பாக அப்பா அவர்களுக்கு எதிராகக் குற்றவியல் நெருக்கடி கொடுக்கத்தக்க ஒரு பொய்யான கிரிமினல் OP பதிவு செய்தான். இந்தக் காரியத்திலும் அப்பா அவர்களுடைய அன்பான கர்த்தர் மிக அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 25.02.2008 அன்று கனம் நீதிபதி திரு. K. N. பாஷா அவர்கள் மூலமாக அந்த மனுவைத் தள்ளுபடி செய்து தள்ளுபடி உத்தரவு கொடுத்து மாபெரும் வெற்றியைத் தந்து, அப்பா அவர்களையும், கர்த்தருடைய சபையையும், அதன் ஊழியத்தையும் அதிசயமான பிரகாரமாகப் பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

கனம் நீதிபதி திரு. K. N. பாஷா அவர்கள் மேற்குறிப்பிட்ட தள்ளுபடி உத்தரவு கொடுத்திருக்காவிட்டால் கர்த்தருடைய சபையும், கர்த்தருடைய ஊழியத்தின் நிலைமையும் ஈடு செய்ய முடியாத இழப்பாகவும், அப்பா அவர்களுடைய நிலைமை மிக நிர்ப்பந்தமானதாகவும் இருந்திருக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எவ்வளவு அதிசயமான கிரியை இது!

பின்பு இந்தப் பொய்யான, ஏமாற்றுக்காரத் தலைவனின் தூண்டுதலின் பேரிலும் வழிகாட்டுதலின் பேரிலும் அவனுடைய மிக நெருங்கிய நண்பன் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஒரு பொய்யான நீதிப் பேராணை கொடுத்து, 21.02.2012 ல் முற்றிலும் பொய்யான கீழ்க் குறிப்பிட்ட உத்தரவைப் பெற்றான். "கற்றறிந்தோர் அறிவுரைப்படி அவர் (சாது. C. செல்வராஜ்) நிர்வாகி அல்ல; மலவிளையைத் தலைமையிடமாகக் கொண்ட ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை தற்போது வேறு நிர்வாகிகளின் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது". எப்படிப்பட்ட முற்றிலும் பொய்யான ஆணை இது! என்ன ஒரு முழுப் பொய் இது!

அதன்பின்பு அப்பா அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் உண்மையான, சரியான உத்தரவு பெறும்படி, ஒரு மறு ஆய்வு மனு பதிவு செய்தார்கள். இந்தக் காரியத்திலும் மிகவும் அன்பான கர்த்தரும், தேவனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 18.07.2012 அன்று கனம் நீதிபதி திரு. K. வெங்கடராமன் அவர்களால் ஒரு உண்மையான சரியான மறு ஆய்வு உத்தரவு கொடுத்து, மாபெரும் வெற்றியைத் தந்து அதிசயமான பிரகாரமாக அப்பா அவர்களையும், கர்த்தருடைய சபையையும், கர்த்தருடைய ஊழியத்தையும் பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

கனம் நீதிபதி திரு. K. வெங்கடராமன் அவர்கள் இந்த உண்மையான சரியான மறு ஆய்வு உத்தரவினை 18.07.2012-ல் வழங்காதிருந்திருந்தால் கர்த்தருடைய சபையின், கர்த்தருடைய ஊழியத்தின் நிலைமை ஈடுகட்ட முடியாத இழப்புக்குள்ளாகி முற்றிலும் குழப்பத்திற்குள்ளாகியிருக்கும். அப்பா அவர்களின் நிலைமையும் மிகவும் நிர்பந்தமானதாக ஆகியிருக்கும். நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எத்தகைய அதிசயமான காரியம் இது! நம்முடைய ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எத்தகைய அற்புதமான கிரியை இது!

பொய்யான முகவரிகளுடன் ஆயிரமாயிரமான துண்டுப் பிரதிகள் அப்பா அவர்களுக்கு எதிராகவும், கர்த்தருடைய சபைக்கும், அதன் ஊழியத்துக்கும் எதிராகவும் அச்சிடப்பட்டு பல்வேறு இடங்களிலுள்ள பல்வேறு ஜனங்களுக்கும், பல்வேறு அரசு துறைகளுக்கும் நேரிலும், தபாலிலும் தாராளமாக விநியோகம் செய்யப்பட்டது. இந்தப் பொய்யான துண்டுப் பிரதிகளை, இந்தப் பொய்யான ஏமாற்றுக்காரத் தலைவன் பொய்யான உரிமையியல் வழக்குகளிலும், பொய்யான குற்றவியல் புகார்களிலும் அப்பா அவர்களுக்கு எதிராகவும், கர்த்தருடைய சபைக்கும், அதன் ஊழியத்துக்கும் எதிராகவும் பயன்படுத்தினான். அவனுடைய மிகவும் நெருங்கிய நண்பன், விஷம் நிறைந்த, கொடிய ஆபத்தான துன்மார்க்க ஊழியக்காரனும் அந்தப் பொய்யான துண்டுப்பிரதிகளை அவனுடைய பொய்யான குற்றவியல் வழக்குகளிலும், பொய்யான குற்றவியல் புகார்களிலும் தாராளமாகப் பயன்படுத்தினான்.

மேற்குறிப்பிட்ட காரியங்களிலெல்லாம் நம்முடைய அன்பான தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்போதும் அப்பா அவர்களுடனும் அவருடைய சபையுடனும், அவருடைய ஊழியத்துடனும் கூட இருந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

மேலும் இதற்கிடையில் இந்தப் பொய்யான, ஏமாற்றுக்கார, கட்டுப்படுத்த இயலாத, கட்டுப்பாடற்ற, கீழ்ப்படியாத துன்மார்க்க ஊழியக்காரனாகிய தலைவன் கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரத்தில் தங்கத் தொடங்கினான். நாளடைவில் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் வசிக்கும் முகவரியுடன் கூடிய ஒரு பழைய சொந்தக்காருடன் திருவனந்தபுரத்தில் நிரந்தரமாகத் தங்குபவன் ஆனான்.

மேலும் 08.01.1990 ல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீக பிரசன்னத்தில் தெய்வீக ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் 'ஊழியர் அறிவுரைகள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அதை ஏற்றுக் கொண்டு, கையொப்பமிட்டு, தேவ உடன்படிக்கை பண்ணிக் கொண்டதை மீறி அவனுடைய சொந்த விருப்பத்தில், சொந்த ஞானத்தில் தானாகவே கர்த்தருடைய சபையை விட்டும், மலவிளை ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் ஊழியத்தை விட்டும், மலவிளையின் ஊழியத் தொகுதியை விட்டும் வெளியேறி, அவனுடைய சொந்த விருப்பத்தின்படியும், சொந்த ஞானத்தின் படியும் தானாகவே 'ஆராமடா தெய்வ சபா' கூடாரப் பள்ளி பதிவு எண் T 1092/80 கார்மல் மண்டபம் ஆராமடா அஞ்சல், திருவனந்தபுரம் 695 032 கேரள மாநிலம் என்ற முகவரியில் உள்ள வேறொரு சபையில் சேர்ந்து, தெரிந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட தலைவனானான். அவன் ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையில் கையொப்பம் இட்ட பரிசுத்தமான ஒப்பந்தத்தின்படி மலவிளையிலுள்ள கர்த்தருடைய சபையை விட்டும் அதன் ஊழியர் தொகுதியை விட்டும் அவன் வெளியேறக் கூடாது. அப்படி ஒருவன் மலவிளையிலுள்ள கர்த்தருடைய சபையை விட்டும், அதன் ஊழியர் தொகுதியை விட்டும் வெளியேறினால், கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையிலுள்ள அவனுடைய எல்லா உரிமைகளையும் நன்மைகளையும் இழந்து விடுகிறான்.

'ஆராமடா தெய்வ சபா' வின் தலைவனாகி நிரந்தரமாக கேரள மாநிலத்திலுள்ள திருவனந்தபுரத்தில் வசிக்கத் தொடங்கிய பின் இந்தப் பொய்யான ஏமாற்றுக்கார துன்மார்க்க ஊழியக்காரனாகிய தலைவன் தொடர்ந்து பல நீதிமன்றங்களில் பொய்யான குற்றவியல் புகார்களையும், பொய்யான உரிமையியல் அறிவிப்புகளையும் அனுப்பிக் கொண்டும் தொடர்ந்து பொய்யான குற்றவியல் வழக்குகளையும், பொய்யான உரிமையியல் வழக்குகளையும் பதிவு செய்து கொண்டே இருந்தான். மேலும் பத்மனாபபுரம் முதன்மை மாவட்ட முனிசீப் நீதிமன்றத்தில் ஒரு பொய்யான நடைமுறை மனுவும் E.P. வேறொரு பொய்யான நடைமுறை விண்ணப்பமும் E.A. 26.06.2013 ல் கொடுத்து 03.03.2014 ல் பொதுக்கட்டளையாக ஒரு பிழையான தீர்ப்பும் இரண்டு பிழையான ஆணையான (decreetal Order) கட்டளைகளைப் பெற்றான். ஒரு பிழையான ஆணையானது, சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் மனப்பூர்வமாக 08.02.2012 ல் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் தீர்ப்புக்கு S.A. 114/2008 கீழ்ப்படியவில்லையென்று அப்பா அவர்களை ஒரு மாதம் உரிமையியல் சிறைச்சாலையில் வைக்குமாறும்; மற்றுமொரு பிழையான ஆணையில் மேற்குறிப்பிட்ட சென்னை உயர் நீதிமன்ற ஆணைப்படி அதை நடைமுறைப்படுத்த காவலர் பாதுகாப்பு அளிக்கப்பட, அவன் மலவிளை சபை குடியிருப்பில் தனக்குரிய இடத்தில் தங்கியிருக்கவும், மலவிளை ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபைச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு மற்ற சக ஊழியர்களுடன் ஆராதனைகளில் பங்குபெற ஆணை பெற்றான். அப்பா அவர்கள் ஒரு மாதம் உரிமையியல் சிறையில் இருக்கும் போது அப்பா அவர்கள் இல்லாத நேரத்தில் மலவிளையில் கர்த்தருடைய சபையிலும் கர்த்தருடைய ஊழியத்திலும் சுமூகமான சமாதானமான நிர்வாகத்தையும், கண்காணிப்பையும், செயல்பாட்டையும் சீர்குலைத்து குழப்பம்,

கலவரம் கட்டுப்பாடற்ற நிலையை உருவாக்கும் தீய எண்ணத்துடன் அந்த இரண்டு பிழையான ஆணைகளையும் பெற்றான். எவ்வளவு பொய்யான துன்மார்க்கமான ஊழியன் அவன்!

உண்மையென்னவெனில் மேற்சொன்ன S.A. 114/2008 அதாவது மேற்சொன்ன S.A. அறிவிக்கப்படும் முன்பே அவன் தானாகவே மேற்சொன்ன 'ஆராமடா தெய்வ சபா' வில் சேர்ந்து அதன் தெரிந்தெடுக்கப்பட்ட நியமிக்கப்பட்ட தலைவராக 30.01.2011 முதல் 'ஆராமடா தெய்வ சபா' வை அதிகார பூர்வமாக கொண்டு, ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையின் ஊழியர் அறிவுரைகளையும் சட்டதிட்டங்களையும் மீறி நடந்து கொண்டிருந்தான். இந்த உண்மையை அவன் மனப்பூர்வமாக சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் 08.02.2012 அன்று மறைத்து விட்டான். எப்படிப்பட்ட பொய்யான தந்திரமான ஊழியக்காரன் அவன்! அந்த இரண்டு பிழையான ஆணைகளைப் பெறுவதற்கு மற்றொரு காரணம் அவன் கர்த்தருடைய சபையை விட்டும், கர்த்தருடைய ஊழியத்தை விட்டும், மலவிளை மற்றும் அதன் ஊழியத்தை விட்டும் தன் சொந்த விருப்பத்தின் படியும், ஞானத்தின் படியும் தானாகவே பிரிந்து சென்று கேரள மாநிலம் திருவனந்தபுரத்திலுள்ள மற்றொரு சபையான 'ஆராமடா தெய்வ சபா' வில் தன் சுய விருப்பத்தின்படியும் ஞானத்தின் படியும் தானாகவே இணைந்து தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்ட தலைவனானதினிமித்தம் 17.02.2013 அன்று கர்த்தருடைய சபையை விட்டும், கர்த்தருடைய ஊழியத்தை விட்டும், மலவிளை ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையை விட்டும், அதன் ஊழியத்தை விட்டும் நீக்கம் செய்யப்பட்டிருந்தான்.

இதற்கிடையில் இவன் இரண்டு பொய்யான உரிமையியல் வழக்குகளை பத்மனாபபுரம் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் அப்பா அவர்களுக்கு எதிராகத் தொடர்ந்தான். ஒன்று: தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்

தெய்வீகப் பிரசன்னத்திற்கு முன்பாக 08.01.1990 ல் தான் சேர்ந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு, ஒத்துக்கொண்டு கையொப்பமிட்டு அதன்படி நடப்பேன் என்று உறுதியெடுத்ததான 'சபை ஊழியர் அறிவுரைகளும் சட்ட திட்டங்களும்' சபைச் சட்டதிட்டங்களையும் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும். அடுத்தது: அப்பா அவர்களுக்கு எதிராக ஒரு பொய்யான உரிமையியல் வழக்கு, கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையை நடத்தும் தகுதி சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுக்கு இல்லை என்றும்; மலவிளையிலுள்ள கர்த்தருடைய சபையை நடத்தும் தகுதி தனக்கு உள்ளது என்றும் அறிவித்து ஆணையிட வேண்டும் என்று தொடர்ந்தான். இதைத் தொடர்ந்து 07.08.2015 அன்று பத்மனாபபுரம் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்ற கனம் நீதிபதி திரு. S. ஜீவ பாண்டியன் என்பவரால் மேற்சொன்ன இரண்டு பொய்யான உரிமையியல் வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கனம் கூடுதல் மாவட்ட முன்சீப் திரு. S. ஜீவ பாண்டியனை அவரது நேர்மை, ஒளிவு மறைவற்ற தன்மை, உத்தமம் மற்றும் நீதியின் காரணமாக ஆசீர்வதிப்பாராக. மேலும் அவரது குடும்பத்தை அதிகமான இம்மைக்கும் மறுமைக்குமுரிய ஆசீர்வாதங்களால் நிறைத்து முடிவில் தேவனுடைய ராஜ்யமாகிய பரலோக பாக்கியத்தை, நித்திய பரலோக பாக்கியத்தை என்றென்றும் கொடுப்பாராக.

சாது. C. செல்வராஜ் (அப்பா) 03.03.2014 அன்று பத்மனாபபுரம் முதன்மை மாவட்ட முன்சிப் நீதிமன்றம் வழங்கிய இரண்டு பிழையான ஆணைகளால் மிகவும் மன வேதனையடைந்து அவைகளை மறுபரிசீலனை செய்ய 07.03.2014 அன்று

இரண்டு உரிமையியல் மறுபரிசீலனை மனுக்களை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்தார்கள். 03.03.2014 அன்று அளித்த E.P. ஆணையை பத்மனாபபுரம் முதன்மை மாவட்ட முனிசீப் நீதிமன்ற கோப்பிலிருந்து நீக்கியும் 03.03.2014 அன்று அளித்த E.P. ஆணையை பத்மனாபபுரம் முதன்மை மாவட்ட முனிசீப் நீதிமன்ற கோப்பிலிருந்து நீக்கியும் ஆணை பிறப்பிக்குமாறு தாக்கல் செய்தார்கள்.

நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகச் செயலாலும் கிருபையினாலும் அதே நாளில் 07.03.2014 அன்றே அந்த இரண்டு மறுபரிசீலனை மனுக்கள் மீது ஆணை பிறப்பிக்க கனம் நீதிபதி திரு. K. கல்யான சுந்தரம் அவர்கள் முன்னிலையில் பரிசீலனைக்கு வந்தது. மனுக்களையும் அதோடு வைத்திருந்த ஆதாரங்களையும் பார்த்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு கனம் நீதிபதி திரு. K. கல்யாண சுந்தரம் அவர்கள் 07.03.2014 அன்றே பிழையான ஆணைகளை நடைமுறைப்படுத்தாமலும் பத்மனாபபுரம் முதன்மை மாவட்ட முன்சிப் நீதிமன்ற ஆணையை 10.03.2014 வரை நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும் மறுபரிசீலனை மனு நம்பரிடப்பட்டு 10.03.2014 அன்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார். பின்பு இந்த ஆணை 01.04.2015 வரை, மறுபரிசீலனை மனு அகற்றப்படும் வரை ஒத்திப் போடப்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

கனம் நீதிபதி திரு. K. கல்யாண சுந்தரம் அவர்கள் மேற்சொன்ன ஆணையை அதே நாளில் 07.03.2014-ல் கொடுக்காதிருந்திருந்தால் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களின் நிலைமை சிறைச் சாலையில் மிகவும் பரிதாபமாக இருந்திருக்கும். சபையை ஒழுங்காக, சமாதானமாக, நிர்வகிக்க, மேற்பார்வை செய்ய, நடத்த, அப்பா அவர்கள் இல்லாத நேரத்தில், சபையின்

சத்துருக்களின் தலையீட்டால் கர்த்தருடைய சபையாகிய மலவிளை ஆதி பெந்தெகொஸ்தே சபையின் நிலைமையும், அதன் ஊழியத்தின் நிலைமையும் மிகவும் நிர்பந்தமாக ஆகியிருக்கும். கர்த்தருடைய சபையின் நிலைமையும் அதன் ஊழியத்தின் நிலைமையும் எவ்வளவு நிர்பந்தமாகியிருக்கும்!

இந்தக் காரியத்திலும் கூட அன்பின் கர்த்தரும், தேவனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதிசயமான பிரகாரமாக கனம் நீதிபதி திரு. கே. கல்யாண சுந்தரம் அவர்கள் மூலமாக மாபெரும் வெற்றியைத் தந்து அப்பா அவர்களையும் கர்த்தருடைய சபையையும், கர்த்தருடைய ஊழியத்தையும் பாதுகாத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

அன்பான கர்த்தரும், அன்பான தேவனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 01.04.2015 அன்று கனம் நீதிபதி திருமதி. புஷ்பா சத்திய நாராயனா என்பவர்களால் முதலாவது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலிருந்து ஒரு மாபெரும் வெற்றியை அப்பா அவர்களுக்கும், கர்த்தருடைய சபையாகிய மலவிளை ஆதி பெந்தெகொஸ்தே சபைக்கும்; அதன் ஊழியத்திற்கும் கொடுத்தார். அதன் விவரமாவது: வாதி சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் எந்த ஒரு கீழ்ப்படியாமையும் காண்பிக்கவில்லை; பிரதிவாதிதான் உயர்நீதிமன்ற ஆணைக்குக் கீழ்ப்படியாமை காண்பித்துள்ளான். ஆராதனைக்குப் பங்கு பெறலாம் என்ற உரிமையை மீறியுள்ளான். மேலும் மலவிளை சபையின் (ஊழியக்காரர் சபைச் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்; ஊழியர் தன் சொந்த விருப்பத்தில் சபையை விட்டுச் சென்றாலோ அல்லது சபையை விட்டுத் தள்ளப்பட்டாலோ அவன் எந்த உரிமையும் கோர முடியாது. ஊழியர் தன்னுடைய

சொந்த விருப்பத்தில் சென்ற பின்பு மலவிளை சபையின் எல்லா உரிமைகளையும் இழந்து விடுகிறான். ஆகவே பிரதிவாதி (அவன்) 2010 – 2011 ல் 'ஆராமடா தெய்வ சபா' பெயருள்ள புதிய சபையில் சேர்ந்து அந்தச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டான் என்றும், 14.12.2011 அன்று தலைவர் என்ற முறையில் 'ஆராமடா தெய்வ சபா' சார்பில் நிர்வாகக் குழு கூட்டம் கூட்டியுள்ளான் என்றும், ஏறக்குறைய 2010 லிருந்தே கேரள மாநிலம் திருவனந்தபுரம் முகவரியில் தங்கியிருந்து கொண்டு அவனுடைய பெயரில் கேரள பதிவு எண் கொண்ட கார் வாங்கியுள்ளான் என்றும் உறுதியாகிறது. ஒரு ஊழியக்காரன் தன்னிச்சையாக மலவிளை ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையை விட்டு வெளியேறினால் அவன் சபையின் எல்லா உரிமைகளையும் இழந்து விடுகிறான். அவன் திரும்பிவர உரிமை கோர முடியாது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

இதன் விளைவாக அப்பா அவர்கள் கொடுத்திருந்த இரண்டு மறுபரிசீலனை மனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பத்மனாபபுரம் முதன்மை மாவட்ட முன்சிப் அளித்த E.P., E.A. இரண்டு ஆணைகளும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் கனம் நீதிபதி திருமதி. புஷ்பா சத்திய நாராயனா அவர்களால் 01.04.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அது குறித்த மற்ற புகார்களும் தள்ளுபடி செய்யப் பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

பின்பு அந்தக் கள்ளத்தனமான, ஏமாற்றுத்தனமான, துன்மார்க்க ஊழியக்காரன் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுமுறை மனு கொடுத்தான்.

கடைசியாக உச்சநீதிமன்ற நீதிபதிகளாகிய கனம் நீதிபதி திரு. ஃபஹீர் முகமது இப்ராஹீம் கலிஃபுல்லா, நீதிபதி திரு. உதய உமேஷ் லலித் ஆகிய

இரண்டு நீதிபதிகளும் அந்தச் சிறப்பு விடுமுறை மனுவை ஏற்றுக் கொள்ள மறுத்து 27.07.2015 அன்று தள்ளுபடி செய்தார்கள். அன்பின் கர்த்தரும் அன்பின் தேவனுமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 27.07.2015 அன்று இந்திய உச்சநீதிமன்றத்திலிருந்து மாபெரும் வெற்றியை கனம் நீதிபதி திரு. ஃபஹீர் முகமது இப்ராஹீம் கலிஃபுல்லா மற்றும் கனம் நீதிபதி திரு. உதய உமேஷ் லலித் அவர்கள் மூலமாக அப்பா அவர்களுக்கும், கர்த்தருடைய சபைக்கும் அதன் ஊழியத்திற்கும், மலவிளையைத் தலைமையிடமாகக் கொண்ட ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபைக்கும் அதன் ஊழியத்திற்கும் கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை! நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

ஒன்றான மெய்த் தேவனாகிய இயேசு கிறிஸ்து தாமே இந்த ஆறு கனம் பொருந்திய நீதிபதிகளான கனம் நீதிபதி திரு. ஃபஹீர் முகமது இப்ராஹீம் கலி ஃபுல்லா, கனம். நீதிபதி திரு. உதய் உமேஷ் லலித், கனம் நீதிபதி திருமதி. புஷ்பா சத்திய நாராயனா, கனம் நீதிபதி திரு. K. வெங்கட்ராமன், கனம் நீதிபதி திரு. K. N. பாஷா, கனம் நீதிபதி திரு. K. கல்யாண சுந்தரம் மற்றும் கனம் கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிபதி திரு. S. ஜீவ பாண்டியன் ஆகியோரை அவர்களுடைய நேர்மை, ஒளிவு மறைவுயின்மை, உத்தமம், நீதி நிமித்தமாக அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் இகபர ஆசீர்வாதங்களால் ஆசீர்வதித்து கடைசியில் பரலோக பாக்கியமாகிய நித்திய பாக்கியமாகிய தேவனுடைய பரலோக ராஜ்யத்தை நித்திய நித்தியமாக அளித்து ஆசீர்வதிப்பாராக!

இந்த ஆறு கனம் பெற்ற நீதிபதிகள் மற்றும் கூடுதல் மாவட்ட முன்சீப் மூலமாக நம்முடைய கர்த்தராகிய தேவனாகிய இயேசு கிறிஸ்து அவருடைய மிகவும் பரிசுத்தமான நாமத்திற்காகவும், அப்பா அவர்களுக்காகவும், அவருடைய

சபைக்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும், அவருடைய ஜனங்களுக்காகவும், உலகம் முழுவதற்காகவும் செய்த எவ்வளவு அதிசயமும் பயங்கரமுமான கிரியை இது! இந்தக் காரியத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மையும், தம்முடைய சபையையும், தம்முடைய ஊழியத்தையும், அப்பா அவர்களையும் இந்தியா முழுமைக்கும், உலகம் முழுவதற்கும் மகிமையாக வெளிப்படுத்தித் தாம் இருப்பதையும், அப்பா அவர்கள் இருப்பதையும், அவருடைய சபையையும், அவருடைய ஊழியத்தையும் இந்தியா முழுமைக்கும், உலகம் முழுவதற்கும் உறுதிப்படுத்தியுள்ளார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே, தன்னுடைய முழு நேரத்தையும், பலத்தையும், மனப்பூர்வமாக கர்த்தரைக் குறித்தும், கர்த்தருடைய சபையைக் குறித்தும், அவருடைய ஊழியத்தைக் குறித்தும் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களைக் குறித்தும் கேள்விப்பட்ட நாள் முதல் கர்த்தருக்காகவும், கர்த்தருடைய சபைக்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் அப்பா அவர்களுக்காகவும் முடிவுவரை செவிட்டவரையும், அவரது குடும்பத்தினரையும், அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் அளவில்லாத இகபர நன்மைகளால் ஆசீர்வதித்து முடிவிலே பரலோக பாக்கியமாகிய நித்திய பரலோக பாக்கியமாகிய தேவனுடைய பரலோக ராஜ்யத்தை நித்திய நித்தியமாய்ப் பெற்றுக் கொள்ள ஆசீர்வதிப்பாராக!

ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே எல்லா கனம் பெற்ற நீதிபதிகளையும், மூத்த ஆலோசகர் திரு. ஆர். காந்தி அவர்களையும், எல்லா வழக்கறிஞர்களையும் மற்றும் கர்த்தருக்காகவும் கர்த்தருடைய சபைக்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும், சாது. C. செல்வராஜ் (அப்பா)

அவர்களுக்காகவும் உண்மையுடன் ஒளிவு மறைவற்ற தன்மையுடன், நேர்மையுடன், நீதியுடன் செயல்பட்ட மற்ற எல்லாரையும் அவர்களுடைய குடும்பத்தையும் இகபர நன்மைகளால் ஆசீர்வதித்து முடிவில் பரலோக பாக்கியங்களை ஏராளமாகக் கொடுத்து பரலோக பாக்கியமாகிய நித்திய பாக்கியமாகிய தேவனுடைய பரலோக ராஜ்யத்தை நித்திய நித்தியமாகப் பெற்றுக் கொள்ள ஆசீர்வதிப்பாராக!

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள், அவர்கள் குடும்பத்தில் பெற்றோருக்கு ஒரே மகனாகக் காணப்பட்டார்கள். அப்பா அவர்களும் கர்த்தருடைய ஊழியக்காரராகிய தற்போதுள்ள நம்முடைய ஆத்மீக தகப்பனாகிய குரியன் (அப்பா) அவர்களும் கர்த்தருடைய ஸ்தானாபதியாகிய சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களோடு இருக்கும் போது இரண்டு அல்லது மூன்று முறைகள் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களிடம் "குரியன் உன்னுடைய இளைய சகோதரன்" என்று கூறினார்கள். மேலும் அவர்கள் இருவரும் நம்முடைய ஆத்மீக தகப்பனுடன் இருக்கும் போது ஐயா அவர்கள் அப்பா அவர்களிடம் "குரியன் உன்னுடைய இளைய சகோதரன்; அவன் உயிருடனிருந்தால் உனக்கு மிகவும் உதவியாக இருப்பான்" என்று கூறினார்கள். இது கர்த்தருடைய ஸ்தானாபதியின் உண்மையான வார்த்தை. சாது. குரியன் (அப்பா) அவர்கள் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுக்கு மிகவும் உதவியாக இருப்பார்கள் என்று ஐயா அவர்கள் சொன்னது போல சாது. குரியன் (அப்பா) அவர்கள், ஐயா அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த பின்பு சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுக்கு எல்லாக் காரியங்களிலும் மிகவும் உதவியாக இருந்தார்கள். ஆகவே ஒவ்வொருவரும் சாது. தோமஸ் M. குரியன் (அப்பா) அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், சரீர பலத்திற்காகவும் ஜெபம் பண்ண வேண்டும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தாமே தன்னுடைய முழு நேரத்தையும், பலத்தையும், முழு இருதயத்துடன் கர்த்தருக்காகவும், கர்த்தருடைய சபைக்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் அப்பா அவர்களுக்காகவும் ஆரம்பம் முதல் இறுதி வரை செலவளித்த சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுடைய இளைய சகோதரனும் கர்த்தருடைய ஊழியக்காரருமான சாது. தோமஸ் M. குரியன் (அப்பா) அவர்களை ஆவிக்குரிய மற்றும் சரீர நன்மைகளால் அளவில்லாமல் நிறைத்து முடிவில் பரலோக பாக்கியமாகிய நித்திய பரலோக பாக்கியமாகிய தேவனுடைய பரலோக ராஜ்யத்தை நித்திய நித்தியமாகத் தந்து ஆசீர்வதிப்பாராக என்று அப்பா அவர்களது சாட்சியில் எழுதியிருக்கிறார்கள்.

ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே அப்பா அவர்களுக்கு உதவி செய்த, அப்பா அவர்களுக்காகவும் கர்த்தருடைய சபைக்காகவும் அவருடைய ஊழியத்திற்காகவும் ஜெபம் செய்த நம்முடைய சபையின் எல்லா ஊழியக்காரர்களையும், நமது சபையின் எல்லா விசுவாசிகளையும் மற்ற எல்லா ஜனங்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும் அளவற்ற இகபர ஆசீர்வாதங்களைத் தந்து முடிவிலே பரலோக பாக்கியமான, நித்திய பரலோக பாக்கியமான தேவனுடைய பரலோக ராஜ்யத்தை நித்திய நித்தியமாகத் தந்து ஆசீர்வதிப்பாராக என்று அப்பா அவர்களது சாட்சியில் எழுதியிருக்கிறார்கள். நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், துதி, கனம், மகிமை சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

## 1.18 சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுடைய பரிசுத்தமான நம்பிக்கை (விசுவாசம்) ஜீவ நம்பிக்கை மற்றும் விருப்பம்

சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுடைய விருப்பம் என்னவெனில் அவர்களுடைய ஆத்மீகத் தகப்பனாகிய சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக்

காணவும், ஐயா அவர்கள் இல்லாத நேரத்தில் சபையைக் கவனிக்கவும், நடத்தவும் தந்த சபையின் பொறுப்பை ஒப்படைக்கவும் வேண்டும் என்பதே. ஐயா அவர்கள் சபையைக் கவனித்து சபையை நடத்தச் சொன்ன அந்த நேரத்தில் ஐயா அவர்களுக்கு அமெரிக்கா மற்றும் உலகின் பிற பாகங்களிலும் ஊழியம் உள்ளது. அப்படி அவர்கள் அமெரிக்காவிற்கு ஊழியம் செய்யச் செல்லும் நேரத்தில் சபையைக் கவனித்து நடத்த வேண்டியிருக்கும் என்று அப்பா அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அப்பா அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை கர்த்தருடைய சபையாகிய ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையிலும் அவருடைய ஊழியத்திலும் நிலை நிற்க ஏற்றதாக காணப்பட்டது தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒரு இரகசியமாகும். அப்பா அவர்களைக் குறித்து தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எவ்வளவு அன்பான அக்கறை இது! தேவனுடைய பரிசுத்த ஆவியானவராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் ஆவிக்குரிய முன்மாரி மழை, ஆவிக்குரிய பின்மாரி மழை (*யோவேல் 2 : 23 ; சகரியா 10 : 1*) பெய்யும் போது நடைபெறப் போகிற, நம்முடைய கர்த்தராகிய தேவனாகிய இயேசு கிறிஸ்து உலகில் இருந்த போது செய்த கிரியைகளைவிடப் பெரிய கிரியைகளான பயங்கரமான கிரியைகள், பயப்படத்தக்க கிரியைகள், பலத்த கிரியைகள், அதிசயமான கிரியைகள், அற்புதமான கிரியைகளை (*யோவேல் 14 : 12 – 14*)க் காண வேண்டும் என்பது சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுடைய மற்றொரு விருப்பமாகும்.

சாது C. செல்வா ராஜ் (அப்பா) அவர்கள் சபையில் பலமுறை அனைவரும் அறிய பாஸ்டர் தாமஸ் M. குரியன் அவர்கள் சபையை தனக்குப் பின் நடத்துவார் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். இதை சபையில் ஆவணப்படுத்தி பதிவும் செய்திருந்தார்கள். சாது C. செல்வா ராஜ் (அப்பா) அவர்கள் 14.04.2017 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அதன் பின் கர்த்தருடைய சித்தத்தின்படியே சாது. தாமஸ் M. குரியன் (அப்பா) அவர்கள் மூலமாக கர்த்தருடைய பரிசுத்த சபையை கர்த்தர் தம்முடைய கிருபையினால் கைவிடாது நடத்தி வருகிறார். அப்பா அவர்களுடைய பரிசுத்தமான நம்பிக்கை, ஜீவ நம்பிக்கை மற்றும் விருப்பம் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவேறும் என்று கர்த்தருடைய சபையானது எதிர்நோக்கி வாஞ்சிக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! உங்கள் அனைவருக்கும் சமாதானம்

உண்டாவதாக. நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களெல்லாருடனும் இருப்பதாக. ஆமென்.

--------------------